மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். யாரோ ஒரு தனிப்பட்ட நிறுவனம் பணம் தருவதாகத் தெரிவித்திருப்பதாக உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார். அரசிற்கு இதுவரையில் அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் வரவில்லை. அப்படி வந்தால் அரசு நன்றியோடு அதைப் பெற்றுக் கொண்டு, உறுப்பினருடைய தொகுதியில் அந்த அணையைக் கட்டுவதற்கு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், தன் கையிலே இருக்கிற கட்டுரையை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

பெவிகால் தயாரித்தல்.

* 1685. **திரு. ஆலவயல் சுப்பையா :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில் பனையப்பட்டி அல்லது குழிபிறை பகுதிகளில் புளியங்கொட்டையிலிருந்து பெவிகால் தயாரிக்கும் சிறுதொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

புளியங்கொட்டையிலிருந்து 'பெவிகால்' வகையான பசைகள் தயாரிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. அந்தப் பகுதியில் 50,000-க்கும் மேற்பட்ட புளியமரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் வாழ்கின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து எனது தொகுதியில் பெவிகால் தயாரிக்கும் திட்டத்தை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெவிகால் போன்ற பசைகள் தயாரிப்பதற்கு 'பாலிவினைல் அசிடேட்' என்ற ரசாயனப் பொருள் தான் பயன்படுத்தப்படுகிறது. புளியங்கொட்டையி

1989 நவம்பர் 1]

லிருந்து பவுடர் தயார் செய்து, அதை நெசவுத் துறையில் பயன் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதி சம்பத்தில் அரசு அறிவிப் பினால் தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. தனியார் தொழில் முனைவோர் யாராவது முன் வந்து அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதி கேட்பார்களேயானால் அரசு அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர்களுக்குச் செய்து தரும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்கு பார்த் தாலும் யூகலிப்டஸ் மரங்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. எனவே, அதன் மூலம் யூகலிப்டஸ் ஆயில் அல்லது பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை புதுக்கோட்டையில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அதற்காகத் தனி வினா எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(10-05)

சேடப்பட்டி தொகுதியில் தொழிற்பேட்டை.

* 2076. **திரு. ஆ. அதியமான் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில், எழுமலை யிலோ, பேரையூரிலோ, கல்லுப்பட்டியிலோ அரசு தொழிற் பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

(10 05)

திரு. ஆ. அதியமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, என்னுடைய சேடப்பட்டித் தொகுதி மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்த நிதி ஆண்டில் இல்லை யென்றாலும் வருகின்ற நிதி ஆண்டிலாவது அரசு தொழிற் பேட்டை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.